# 25-09-2023 செய்தி

## மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு

**நிறைவேற்றம்**

- மக்களவையில் மசோதாவை ஆதரித்து 454 வாக்குகளும், எதிர்த்து 2 வாக்குகளும் பதிவாகி இருந்தன. மாநிலங்களவையில் மசோதாவுக்கு எந்தவித எதிர்ப்பும் இல்லை. 214 வாக்குகள் ஆதரவாக பதிவாகின. யாரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை.

**1987**

- முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கடந்த 1987ல் அப்போதைய அமைச்சர் மார்க்ரெட் ஆல்வா தலைமையில் 14 பேர் கொண்ட குழு வழங்கிய பரிந்துரை அடிப்படையில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கான அரசியலமைப்பு திருத்த மசோதாவை ராஜிவ் காந்தி அறிமுகப்படுத்தினார்.
- இந்த மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் 1989ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மாநிலங்களவையில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்ட போது நிறைவேற்றப்படவில்லை.

1992

- 1992ல் பிரதமர் பி.வி.நரசிம்ம ராவ் அரசு 73 மற்றும் 74வது அரசியலமைப்பு திருத்தச் சட்டங்களை நிறைவேற்றியது. இந்த பிரிவு மூலம் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33.3 சதவீத இடஒதுக்கீட்டை கட்டாயமாகக்கியது.
- இன்று நாடு முழுவதும் 15 லட்சம் பெண் உள்ளாட்சி தலைவர்கள் பதவியில் இருக்கிறார்கள் என்றால் அதற்கு விதை போட்டது முன்னாள் பிரதமர் ராஜவ் காந்தி தான்.

**சிக்கல்கள்**

- 1. 2026ம் ஆண்டுக்கு பிறகு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டும்
- 2. மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பிறகு தொகுதி மறுவரையறை பணிகளை செய்ய வேண்டும்.
- 3. தொகுதி மறுவரையறை முடிந்த பிறகு ஒவ்வொரு மாநிலத்திலும் எம்பி தொகுதிகள் எண்ணிக்கை மாற்றி அமைக்கப்படும். அதன் அடிப்படையில் தான் மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்படும்.

**நமது நாட்டில் சாதித்த பெண் தலைவர்கள்**

- இந்திரா காந்தி இந்தியாவின் முதல் மற்றும் ஒரே ஒரு பெண் பிரதமர்.
- பிரதீபா பாட்டில், திரவுபதி முர்மு என்ற 2பேர் ஜனாதிபதி பதவியை அலங்கரித்துள்ளனர்.
- இந்தியா முழுவதும் 16 பெண்கள் முதல்வராக பதவி வகித்துள்ளனர்.
- ஆனால் கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, புதுவை உள்பட 17 மாநிலங்களில் இன்னும் ஒரு பெண் கூட முதல்வராகவில்லை.
- டெல்லி, உத்திரபிரதேசம், தமிழ்நாட்டில் மட்டும் 2 பெண்கள் முதல்வராக பதவி வகித்துள்ளனர்.
- டெல்லியில் ஷீலா தீட்சித், தமிழ்நாட்டில் ஜெயலலிதா, மேற்கு வங்கத்தில் மம்தா ஆகியோர் மிக நீண்ட நாட்கள் முதல்வராக பதவி வகித்துள்ளனர்.
- காங்கிரஸ் சார்பில் 5 பேரும், பாஜக சார்பில் 4 பேரும் பெண் முதல்வர்களாக பதவி வகித்துள்ளனர்.

**மகளிருக்கு அதிகாரம் அளித்த தமிழ்நாடு**

- தமிழ்நாட்டில் நீதிக்கட்சி 1921ம் ஆண்டு மே 10ம் தேதி பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கும் தீர்மானத்தை இந்தியாவிலேயே முதல் முறையாக நிறைவேற்றியது.
- 1927ம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக பெண் எம்எல்ஏவாக தமிழ்நாட்டில் இருந்து டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தேர்வு செய்யப்பட்டார்.
- 1929ம் ஆண்டு செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை மாநாட்டில் தந்தை பெரியார், பெண்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசியலில் இட ஒதுக்கீடு வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார்.
- நாட்டிலேயே முதன்முறையாக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டதும் தமிழ்நாட்டில் தான்.
- தமிழ்நாடு ,மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், பீகார், சட்டீஸ்கர், ஜார்க்கண்ட் மற்றும் கேரளா போன்ற பல மாநிலங்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீட்டை உறுதி செய்ய சட்ட விதிகளை உருவாக்கியுள்ளன.

**நாடு முழுவதும் இதுவரை 16 பெண் முதல்வர்கள் தான்**

- சுதந்திரம் பெற்ற பிறகு நமது நாட்டில் உள்ள மாநிலங்களில் இதுவரை 16 பெண்கள் தான் முதல்வராக பதவி வகித்துள்ளனர். அவர்கள் பட்டியல் வருமாறு:
- இந்தியாவிலேயே முதன்முறையாக உத்திரபிரதேசத்தில் தான் 1963ம் ஆண்டு அக்டோபர் 2ம் தேதி பெண் சுதந்திர போராட்ட வீராங்கனை கிருபளானி முதல்வரானார். காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அவர் 3 ஆண்டு 162 நாள் முதல்வராக இருந்தார்.
- ஒடிசாவில் காங்கிரஸ் சார்பில் 1972ம் ஆண்டு ஜுன் 14 முதல் 1976ம் ஆண்டு டிசம்பர் 16ம் தேதி வரை நந்தினி சத்பதி முதல்வராக இருந்தார்.
- கோவாவில் மகாராஷ்டிரா கோமந்தக் கட்சியை சேர்ந்த சசிகலா சக்கோத்கர் 1973ம் ஆண்டு ஆகஸ்ட் 12 முதல் 1976ம் ஆண்டு ஏப்ரல் 27 வரை முதல்வராக இருந்தார்.
- அசாம் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அன்வரா தைமூர் என்பவர் 1980 டிசம்பர் 6ம் தேதி முதல் 1981 ஜுன் 30ம் தேதி வரை முதல்வராக இருந்தார்.
- தமிழ்நாட்டில் முதன்முறையாக எம்ஜிஆர் மனைவி ஜானகி 1988ம் ஆண்டு ஜனவரி 7ம் தேதி முதல் 30ம் தேதி வரை 23 நாட்கள் முதல்வராக இருந்தார்.
- ஜானகியை தொடர்ந்து ஜெயலலிதா 1991 ஜுன் 24 முதல் 1996 மே 12 வரையும், 2001 மே 14 முதல் 2001 செப்டம்பர் 21ம் தேதி வரையும், 2002 மார்ச் 2 முதல் 2006 மே 12 வரையும், 2011 மே 16 முதல் 2014 செப்டம்பர் 27 வரையும், 2015 மே 23 முதல் 2016 டிசம்பர் 5 வரையும் மொத்தம் 14 ஆண்டு 124 நாட்கள் தமிழ்நாட்டின் முதல்வராக இருந்தார்.
- உத்திரப்பிரதேசத்தில் பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மயாவதி 1995 ஜுன் 13 முதல் 1995 அக்டோபர் 18 வரையும், 1997 மார்ச் 21 முதல் 1997 செப்படம்பர் 21 வரையும், 2002 மே 2 முதல் 2003 ஆகஸ்ட் 29 வது வரையும், 2007 மே 13 முதல் 2012 மார்ச் 15 வரையும் மொத்தம் ஏழு ஆண்டுகள் 5 நாட்கள் முதல்வராக இருந்துள்ளார்.
- பஞ்சாப் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியைத் சேர்ந்த ராஜிந்தர் கவுல் பாதல் 1996 நவம்பர் 21 முதல் 1997 பிப்ரவரி 12 வரை 83 நாட்கள் முதல்வராக இருந்து உள்ளார்.
- பீகாரில் லாலுபிரசாத் யாதவ் மனைவி ராப்ரி தேவி 1997 3லை 25 முதல் 1999 பிப்ரவரி 11 வரையும், 1999 மார்ச் 9 முதல் 2000 மார்ச் 2ம் தேதி வரையும், 2000 மார்ச் 11முதல் 2005 மார்ச் 6ம் தேதி வரையும் மொத்தம் 7 ஆண்டுகள் 190 நாட்கள் முதல்வராக இருந்துள்ளார்.
- டெல்லியில் பா.ஜ.க சார்பில் சுஷ்ம சுரஜ் 1998 அக்டோபர் 12 முதல் 1998 டிசம்பர் 3 வரை மொத்தம் 52 நாட்கள் முதல்வராக இருந்துள்ளார்.
- டெல்லியில் காங்கிரஸ் சார்பில் ஷீலா தீட்சித் 1996 டிசம்பர் 3 முதல் 2013 டிசம்பர் 28 வரை மொத்தம் 15 ஆண்டுகள் 25 நாட்கள் முதல்வராக இருந்துள்ளார்.
- மத்தியபிரதேசத்தில் பா.ஜ க சார்ப்பில் உமாபாரதி 2003 டிசம்பர் 8 முதல் 2004 ஆகஸ்ட் 23 வரை 259 நாட்கள் முதல்வராக இருந்துள்ளார்.
- ராஜஸ்தானில் பா.ஜ.க சார்பில் வசந்துரா ராஜே 2003 டிசம்பர் 8 முதல் 2008 டிசம்பர் 13 வரையும், 2013 டிசம்பர் 13 முதல் 2018 டிசம்பர் 17 வரையும் மொத்தம் 10 ஆண்டுகள் 9 நாட்கள் முதல்வராக இருந்துள்ளார்.
- மேற்குவங்க மாநிலத்தில் திரிணாமூல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி 2011 மே 20ம் தேதி முதல் தொடர்ந்து 12 ஆண்டுகளாக முதல்வர் பதவியில் நீடித்து வருகிறார்.
- குஜராத் மாநிலத்தில் பா.ஜ காவை சேர்ந்த ஆனந்திபென் பட்டேல் 2014 மே 22 முதல் 2016 ஆகஸ்ட் 7 வரை 2 ஆண்டுகள் 77 நாட்கள் முதல்வராக இருந்துள்ளார்.
- காஷ்மீரில் மெகபூபா முப்தி 2016 ஏப்ரல் 4 முதல் 2018 ஜுன் 19 வரை 2 ஆண்டு 76 நாட்கள் முதல்வராக இருந்துள்ளார்.

**பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கிய டாப் 5 நாடுகள்**

| | |
|---|---|
| ருவாண்டா | 61 |
| கியூபா | 53 |
| நிகரகுவா | 52 |
| மெக்சிகோ | 50 |
| நியூசிலாந்து | 52 |

**இந்திய துணைக்கண்டத்தில் பெண் எம்பிக்கள் சதவீதம்**

| | |
|---|---|
| நேபாளம் | 33 |
| வங்கதேசம் | 21 |
| பாகிஸ்தான் | 20 |
| இந்தியா | 15 |
| இலங்கை | 5 |

**பொருளாதாரத்தில் வலுவான நாடுகள்**

| | |
|---|---|
| பிரான்ஸ் | 37 |
| இங்கிலாந்து | 35 |
| ஜெர்மனி | 35 |
| இத்தாலி | 32 |
| அமெரிக்கா | 29 |
| சீனா | 25 |
| பிரேசில் | 18 |
| ரஷ்யா | 16 |
| ஜப்பான் | 10 |

**வங்க தேசத்தில் 150 பெண் எம்பிக்கள்**

- வங்கதேசத்தில் பெண் எம்பிக்களுக்கு 21 சதவீதம் இட ஒதுக்கீடு உள்ளது. ஆனால் வங்கதேச நாடாளுமன்றத்தில் 300 பெண் எம்பிக்களில் தற்போது 50 சதவீதம் பேர். அதாவது 150 பேர் பெண் எம்பிக்கள்.